| நிருவாக மற்றும் பதவியணிச் சேவை | 25 | 10,999,449 | | 9,487,571 | |
| கல்விச் சேவை | 25 | 12,052,342 | | 9,107,616 | |
| பிரயாணச் செலவுகள் | | 90,469 | | 469,260 | |
| வழங்கல்கள் | | 1,986,845 | | 1,681,866 | |
| திருத்த வேலை மற்றும் பராமரிப்பு செலவு | | 789,693 | | 512,393 | |
| போக்குவரத்து, தொடர்பாடல் சேவை | | 7,479,607 | | 7,741,277 | |
| பெறுமானத்தேய்வு மற்றும் பதிலீட்டுச் செலவு | | 3,047,842 | | 3,054,273 | |
| பிற தொழிற்பாட்டு செலவுகள் | | 4,912,951 | | 3,019,876 | |
| **தொழிற்பாட்டு செலவு மொத்தம்** | | | **41,359,197** | | **35,074,132** |
| தொழிற்பாட்டு சேமிப்பு/ குறைவு | | | (3,467,632) | | (2,709,969) |
| | | | | | |
| **நிதிசார் செலவு** | | | | | |
| சொத்துக்கள், உபகரணங்கள் விற்பனையின் மூலம் கிடைத்த வருமானம் | | | - | | - |
| உரிய காலத்திற்கான தேறிய சேமிப்பு/ குறைவு | | | **(3,467,632)** | | **(2,709,969)** |

பிழையற்றதென உறுதிப்படுத்துகின்றோம்.

(வண.கலாநிதி கொட்டப்பிட்டியே ராகுல தேரோ)
பணிப்பாளர்
பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

(திருமதி)ஏ.பி.எஸ்.எம்.தொலகே )
சிரேட்ட உதவி நிதி பொறுப்பாளர்
பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்
களனி பல்கலைக்கழகம்
2013 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான நிதி ஓட்டக் கூற்று

| | 2013<br>ரூபா | ரூபா | 2013<br>ரூபா | ரூபா |
|---|---|---|---|---|
| தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம் | | | | |
| வருடத்திற்கான மிகை (குறைவு) | | (3,467,632) | | (2,709,969) |
| நிதி தழும்பலின்பால் பாதிக்கும் விடயங்கள் சார்பிலான சீராக்கல்கள் | | - | | - |
| பணிக்கொடை | | (324,508) | | 482,483 |
| பெறுமானத்தேய்வு | | 3,038,341 | | 2,551,362 |
| பதிவளிப்பு | | (1,191,704) | | (1,158,314) |
| | | (1,945,502) | | (834,439) |
| கடந்த காலப்பகுதிகளுக்கான விடயங்கள் | | - | | - |
| தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றங் களுக்கு முன்னைய தொழிற்பாட்டு மிகை | | (1,945,502) | | (834,439) |
| தொழிற்படு மூலதன விடயங்களின் மாற்றங்கள் | | | | |
| களஞ்சிய முற்பணம், ஆராய்ச்சி, வெளியீடு | | | | |
| இருப்பு (அதிகரிப்பு / குறைவு) | (76,206) | | 80,157 | |
| பல்வேறுபட்ட கடன்பட்டோர்(அதிகரிப்பு / குறைவு) | 103,333 | | (117,194) | |
| பதவியணியினர் முற்பணம்(அதிகரிப்பு / குறைவு) | 386,165 | | (112,146) | |
| சேவை வழங்குகை முற்பணம்(அதிகரிப்பு/குறைவு) | 46,950 | | (12) | |
| எதிர்காலக் கொடுப்பனவு(அதிகரிப்பு / குறைவு) | (788,230) | | (22,686) | |
| எதிர்காலக் கொடுப்பனவு(அதிகரிப்பு / குறைவு) | 107,500 | | (50,000) | |
| பிற வைப்புக்கள் (அதிகரிப்பு / குறைவு) | - | | - | |
| வைப்புகளும் கடனாளிகளும்(அதிகரிப்பு / குறைவு) | 17,940 | | - | |
| அட்டுறுச் செலவு, பிற பொறுப்புக்கள் (அதிகரிப்பு / குறைவு) | 510,851 | 308,304 | 1,265,929 | 1,044,048 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் கிடைத்த தேறிய பெறுமதி | | (1,637,199) | | 209,609 |
| தொழிற்பாட்டு செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம் | | | | |
| நிலையான சொத்துக்களின் கொள்வனவு | (1,186,582,) | | (1,081,489) | |
| பிற முதலீடுகள் | (842,832) | | (864,346) | |
| முதலீட்டு செயற்பாடுகளில் இடப்பட்ட தேறிய நிதி | | (2,029,413) | | (1,945,835) |

| | | | | |
|---|---|---|---|---|
| நிதி செயற்பாடுகளின் மூலம் கிடைத்த நிதி ஓட்டம் | | | | |
| மூலதன செலவுகளுக்கான அரசாங்கத்தின் கொடை | 2,550,000 | | 1,600,000 | |
| பரிசுகளும் கொடைகளும் | - | | - | |
| பிற நிதியங்கள் | 1,253,596 | | 1,163,748 | |
| நிதி செயற்பாடுகளின் மூலம் பிறப்பிக்கப்பட்ட நிதி | | 3,803,596 | | 2,763,748 |
| பணம் மற்றும் பணம் சார்ந்த விடயங்களின் தேறிய அதிகரிப்பு | | 136,984 | | 1,027,523 |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணம் சார்ந்தவை | | | | |
| விடயங்களின் நிலுவை | | 6,477,454 | | 5,449,932 |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் பணம் சார்ந்தவை | | | | |
| விடயங்களின் நிலுவை (குறிப்பு 1) | | 6,614,438 | | 6,477,454 |
| குறிப்பு 1 | | 2013 ரூ. | | 2012 ரூ. |
| வங்கி நிலுவை | | 6,614,438 | | 6,477,454 |
| பிற வங்கி நிலுவை | | - | | - |
| | | 6,614,438 | | 6,477,454 |

பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனம்
களனி பல்கலைக்கழகம்
2013 திசெம்பர் 31 ஆம் திகதியன்றுக்கான தேறிய சொத்துக்களின் தழும்பல்

| | பொது சேர்மம் | மீள் மதிப்பிடல் | மொத்தம் |
|---|---|---|---|
| 2011-01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (1,770,603) | 798,276 | (972,327) |
| 2011 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | 680,658 | - | 680,658 |
| 2012-01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (1,089,946) | 798,276 | (291,669) |
| 2012 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | (2,709,969) | - | (2,709,969) |
| 2013 -01-01 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (3,799,915) | 798,276 | (3,001,638) |
| 2013 ஆம் ஆண்டில் மிகை / (குறைவு) | (3,467,632) | - | (3,467,632) |
| 2013-12-31 ஆம் திகதியன்றுக்கான நிலுவை | (7,267,547) | 798,276 | (6,469,271) |

**கணக்கிடல் கொள்கையும் குறிப்புகளும்**

01. **கணக்கிடல் மூலதர்மங்கள்**

1.1 அறிமுகம்

1.1.1 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்திற்கு அமைவாக 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி, பௌத்த பட்டப்பின் படிப்பு சட்டத்தின் கீழ் களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமாக பாளி, பௌத்த பட்டப்பின் படிப்பு நிறுவனமும் தாபிக்கப்பட்டுள்ளது.

1.1.2 பாளி, பௌத்த துறைகள் தொடர்பில் பட்டப்பின் படிப்பு நிலையிலான கற்பித்தல், பயிற்சியளித்தல், ஆராய்ச்சி செய்தல் போன்ற பணிகளைத் திட்டமிடுதலும் அது சம்பந்தமான பட்டப்பின் படிப்புப் பட்டத்தையும் டிப்ளோமாவையும் வழங்குவதை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

02. **நிதிக் கூற்று**

நிதிநிலைமை பற்றிய கூற்று, நிதி செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றம் பற்றிய கூற்று, நிதி ஓட்டக் கூற்று மற்றும் கணக்கிடல் குறிப்புகள் முதலியனவற்றை நிதிக் கூற்றானது கொண்டுள்ளது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2011 ஆம் இலக்கமுடைய நிதி சுற்றறிக்கையின் மூலம் தொடர்புபடுத்தப்பட்ட இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அரசாங்கத்துறை சார்ந்த கணக்கிடல் தரங்களுக்கு அமைவாக மேற்போந்த கணக்குக் கூற்றானது தயாரிக்கப்பட்டுள்ளது.

03. **நிலையான சொத்துக்களும் மீள் மதிப்பிடலும்**

3.1 சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள்

3.1.1 சொத்துக்களை இனங்காணுதலும் மதிப்பிடலும்

சொத்துக்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் முதலியவற்றின் செலவிலிருந்து திறந்த பெறுமானத் தேய்வினைக் குறைத்துக் கொண்டு தேறிய பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது.

3.1.2 பெறுமானத் தேய்வுக்கான ஒதுக்கங்கள்

இலகுவான வழிமுறையொன்றின் மீது பின்வரும் நடைமுறைச்சொத்துக்களின் பெறுமானத் தேய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தளபாடங்களும் பொருத்துகைகளும் | 10% |
| அலுவலக தளபாடங்களும் உபகரணங்களும் | 20% |
| ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | 20% |
| நூலகப் புத்தகங்களும் பருவகால சஞ்சிகைகளும் | 20% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |

3.2 **இருப்பு**

செலவினை அடிப்படையாகக் கொண்டு FIFO முறைக்கு கணக்கிடப்பட்டுள்ளது.

3.3 கடன்பட்டோர்

கடன்பட்டோராகக் குறிப்பிடப்பட்டுள்ளது பதவியினருக்கு செலுத்தப்படும் முற்பணமாகும். இந்த கடன் மற்றும் முற்பணம் பல்கலைக்கழகங்களின் ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவையை பிணையாக வைத்து வழங்கப்படுகின் றமையினால் மீள அறவிடும் அவதானம் இல்லை. இதற்கமைவாக, ஐயக்கடன் இழிந்தகடன் போன்றவற்றிற்கு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை.

04. **பொறுப்புக்கள்**

4.1 ஓய்வூதிய பணிக்கொடை

1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டத்திற்கு அமைவாக தகைமை பெற்ற ஊழியர்கள் சார்பில் கணக்கிடல் செய்யப்பட்டுள்ளது.

21. **2009 - 2013 வரையிலான நிறுவனத்தின் நிதிநிலைமை**

| வருடம் | அரசாங்கக் கொடை - மீண்டுவரும் | அரசாங்கக் கொடை - மூலதனம் | அரசாங்கக் கொடை - தகவல் தொழினுட்பம் | நிறுவனத்தின் வருமானம் | மொத்த மீண்டு வரும் வருமானம் | மொத்த மீண்டு வரும் செலவு | மீண்டுவரும் நிதி பணிகளின் பெறுபேறு |
|---|---|---|---|---|---|---|---|
| 2009 | 6,000,000 | 85,000 | - | 17,955,534 | 23,955,534 | 23,245,122 | 710,412 |
| 2010 | 7,900,000 | 400,000 | - | 28,878,711 | 28,878,711 | 25,070,959 | 3,807,753 |
| 2011 | 7,314,146 | 750,000 | - | 29,121,279 | 29,121,279 | 28,440,621 | 680,658 |
| 2012 | 6,500,000 | 1,600,000 | - | 25,864,163 | 32,364,163 | 35,074,132 | -2,709,969 |
| 2013 | 11,417,000 | 2,550,000 | - | 26,474,565 | 37,891,565 | 41,359,197 | -3,467,632 |

22. களனி பல்கலைக்கழகத்தின் துணை நிறுவனமான பாளி, பௌத்த கல்வி பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் 2013 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடிந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 16 இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கையும் பதில்களும்.

**විගණකාධිපති දෙපාර්තමේන්තුව**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය / எனது இல. / My No. } ඊයි/එෆ්/පීජීඅයිපීබීඑස්/ 1/13/14

මබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2015 ජූලි 29 දින

DIRECTOR'S OFFICE
12 AUG 2015
University of Kelaniya
P.G.I.P.B.S

අධ්‍යක්ෂ,

පාලි හා බෞද්ධ අධ්‍යයන පශ්චාත් උපාධි ආයතනය.

කැළණිය විශ්වවිද්‍යාලයට අනුබද්ධිත පාලි හා බෞද්ධ අධ්‍යයන පශ්චාත් උපාධි ආයතනයේ 2013 දෙසැම්බර් දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ 1978 අංක 16 දරන විශ්ව විද්‍යාල පනතේ 108(1) උපවගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2015 පෙබරවාරි 10 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මෙ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.පී.සී.වික්‍රමරත්න

විගණකාධිපති (වැඩබලන)

පිටපත් :

1. උපකුලපති - කැළණිය විශ්ව විද්‍යාලය
2. සභාපති - විශ්වවිද්‍යාල ප්‍රතිපාදන කොමිෂන් සභාව
3. ලේකම් - උසස් අධ්‍යාපන හා පර්යේෂණ අමාත්‍යාංශය
4. ලේකම් - මුදල් අමාත්‍යාංශය

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

මගේ අංකය
எனது இல.
My No. ஈசீ/எவ்/பிஜபிபீஎஸ்/1/13/14 ඔබේ අංකය உமது இல. Your No.

දිනය
திகதி
Date 2015 பெப்ரவரி 10

பணிப்பாளர்

பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகம்

**பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின்படி ஏற்படுத்தப்பட்ட 1979 இன் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் ஏற்பாடுகளின் 23 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவின் பிரகாரமான ஒரு விபரமான அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளருக்கு 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம்

நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) மற்றும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தால் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கிறாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்புகள் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அததிகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் இறுதிப் பொருளிருப்பு என அத்தினத்தில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் காட்டப்பட்ட தொகையான ரூபா 385,676 இனை காட்டுவதற்குப் பதிலாக புத்தக மீதியான ரூபா 456,629 காட்டப்பட்டதன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ரூபா 70,953 ஆன தொகை அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) வெகுமதிகள் மற்றும் நன்கொடைகளின் மற்றும் மானியங்களின் கீழ் பெறப்பட்டிருந்த ரூபா 637,957 பெறுமதியான 03 கணனிகள், அச்சிடும் இயந்திரமொன்று மற்றும் வேனொன்று ஆகியன முன்னைய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்டிருந்ததெனினும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வெகுமதிகள் மற்றும் நன்கொடைகள் கணக்கிற்கு சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2013 திசம்பர் 31 ஆம் திகதியில் நிதிக்கூற்றுக்களின் காட்டப்பட்டிருந்த "வெளிப்படுத்தப்பட்ட இருப்பு"ரூபா 1,142,616 ஆக இருந்தததுடன் களஞ்சியப் பதிவேட்டின் படி அத்தினத்தில் அம்மீதி ரூபா 1,024,368 ஆக இருந்தமையால் அம் மீதிகளிடையே ரூபா 118,248 ஆன வேறுபாடு இருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 179,521 கூட்டுத்தொகையான 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன்கள் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக் கூற்றுக்களில் ஏனைய நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள ரூபா 18,249 கூட்டுத்தொகையான இரு பொறுப்புகள் மற்றும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலதமாக கணக்குகளிள் காட்டப்பட்டிருந்த மீளளிக்கப்படவேண்டிய நூலக வைப்புக்கள் ரூபா 4,000 உம் 2013 திசெம்பர் 31 இல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இனங்காமை

பின்வரும் சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் அமைந்தொழுகாமை அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 757 | மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதியப்பட்ட இருப்புக்களிலான பொருட்களில் குறைவு 83 அலகுகளாக இருந்ததுடன் இருப்பு மிகையானது 342 |

| | | |
|---|---|---|
| | | அலகுகள் ஆகும். இம் மிகை மற்றும் பற்றாக்குறை தொடர்பில் பொருத்தமான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் X ஆம் அத்தியாயத்தின் 1.6.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின்போது கல்விசார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட ரூபா 5,389,165 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் சரியான தன்மையைப் பரிசீலிப்பதற்கு கல்விசார் ஊழியர்களின் வரவுப் பதிவெடுகள் மற்றும் விடுகைப் பதிவேடுகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2009 நவம்பர் 13 ஆம் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | களஞ்சியம் மற்றும் ஏனைய பிரிவுகளிலுள்ள கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்காததுடன் நிலையான சொத்துக்கள் பதிவேடிற்கும் நிதிக் கூற்றுக்களின் பட்டோலைகளுக்கு மிடையே ரூபா 4,019,813 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. |

## 2.5 போதுமான அதிகாரத்தால் உறுப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

ஓய்வுபெற்ற சிரேஸ்ட உதவி நிதியாளர் 2013 ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் அப்பதவிக்காக 06 மாத காலத்திற்கு முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் மட்டும் நியமிக்கப்பட்டு அதற்காக ரூபா 60,000 ஆக மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2013 ஒக்தோபர் 17 ஆம் திகதி முதல் எதிர்வரும் ஆகக்கூடிய 06 மாத காலத்திற்கு அவ் உத்தியோகத்தரிடம் சேவையைப் பெற்றுக் கொள்வதற்கு உயர்கல்வி அமைச்சுச் செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருந்தது. அமைச்சரவை அனுமதி இன்றி சேவையின் அவசியம் எனக் குறிப்பிட்டு அந்த நியமனம் வழங்கப்பட்டு 2013 ஏப்ரல் 17 ஆம் திகதி தொடக்கம்

2014 ஏப்ரல் 12 ஆம் திகதி வரை ரூபா 718,064 ஆன கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்ததுடன் நடமாடும் மற்றும் நிலையான தொலைபேசிச் சிட்டைகளுக்கான ரூபா 30,607 ஆன தொகை மீளளிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டிற்கான குறை ரூபா 3,467,632 ஆக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் குறையானது ரூபா 2,709,969 ஆக இருந்தது. இதன் படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் குறையானது ரூபா 757,663 ஆல் அதிகரித்திருந்ததுடன் அவ்வாறான பற்றாக்குறை அதிகரிப்பதற்கு கற்கைநெறிகளின் வருமானம் ரூபா 2,469,162 ஆல் குறைவடைந்தமை மற்றும் கல்விசார் சேவைகளின் சம்பளம் மற்றும் ஊதியம் என்பன ரூபா 2,944,726 ஆல் அதிகரித்தமை என்பன விசேடமாக தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 கல்விசார் செயலாற்றல்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினபோது நிறுவகத்தால் நடாத்தப்பட்ட ஒரு வருடகால 07 கற்கை நெறிகளில் பௌத்த கற்கை பட்டப்பின் படிப்பு டிப்ளோமா கற்கை நெறி, பாளி கற்கை கலைமானி பட்ட கற்கை நெறி, பௌத்த ஆயுர்வேத விரிவுரைக் கற்கை பட்டப்பின் படிப்பு டிப்ளோமாக் கற்கைநெறி மற்றும் பௌத்த ஆயுர்வேத விரிவுரைக் கலைமானி கற்கை நெறி என்பன தொடர்பாக மாணவர்களைப் பதிவு செய்தல் மொத்த மாணவர்கள் பதிவில் நூற்றுக்கு 16% ஆக மட்டுமே இருந்தது.

(ஆ) மொத்த மாணவர் பதிவுகளுடன் ஒப்பிடும் போது பௌத்த கற்கை கலைமானி பட்டக் கற்கை நெறிக்காக மொத்த மாணவர் பதிவின் நூற்றுக்கு 82 சதவீதமான பங்களிப்பும் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் கலைமானி கற்கைநெறி (சிங்கப்பூர்) என்பவற்றுக்காக மொத்த மாணவர் பதிவின் நூற்றுக்கு 02 சதவீதம் மட்டுமான குறைந்த மாணவர் பங்களிப்பும் ஆகும்.

(இ) பரீட்சைகளுக்கும் தோற்றுதலும், பரீட்சைப் பெறுபேறுகளும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2013 ஆம் ஆண்டில் ஒட்டுமொத்த பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 456 ஆக இருந்ததுடன், பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 373 ஆகவும் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 298 ஆகவும் இருந்தன.

(ii) நிறுவகத்தால் நடாத்தப்பட்ட பௌத்தக் கற்கைகள் கலாநிதி பட்டம் மற்றும் பௌத்தக் கற்கைகள் கலாநிதி விஷாரத பட்டப்படிப்புக்களை மேற்கொண்ட 203 ஆன மொத்த மாணவர் எண்ணிக்கையில் மீளாய்வாண்டின் போது பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்களின் எண்ணிக்கை 17 மட்டுமேயாகும்.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிக்கப்பட்டன.

(அ) 1984 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஈ.டபிள்யூ. குணதிலக நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ள மீதியான ரூபா 226,987 மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில் நன்கொடை ரூபா 736,094 என்பன வருடக்கணக்காக குறித்த நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஆ) 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 38,212 பெறுமதியான எடுத்துச் செல்லப்பட்டு மீள ஒப்படைக்கப்படாத நூல்கள் 170 ஆக இருந்ததுடன் நூல்களைப் பெற்றவர்களுடன் இருப்பிடத்தை விட்டு நீங்கியிருந்தமை மற்றும் மரணமான காரணங்களால் இந்த நூல்கள் மீள பெற்றுக்கொள்ளல் ஐயத்திறகிடமானதாக உள்ளமை அவதானிக்கப்பட்டது.

4.3 பதவியணியினர் நிருவாகம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட பதவியணியினை 02 வெற்றிடங்கள் மட்டுமே நிலவியதாக அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 செயற்பாட்டுத் திட்டம்

நிறுவகத்தால் 2013 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்பாட்டுத் திட்டம் முறையான மாதிரியின் படியும் முன்னேற்றத்தை வேறு வேறாக வெளிப்படுத்தக்கூடிய வகையிலும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு உத்தேசிக்கும் கால அட்டவணை, பாதிடப்பட்ட ஏற்பாடு, செலவுக்கான நிதியிடல், அங்கீகரிக்கப்பட்ட பொறுப்புக் கூறும் உத்தியோகத்தர் ஆகிய விடயங்களையும் உள்ளடக்கியதாகக் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நிர்ந்தர கட்டிடமொன்றினை நிர்மாணிக்கும் செயற்பாடு மற்றும் பௌத்த ஆயுர்வேத ஆலோசனைக் கற்கை நெறி மற்றும் புதிய கற்கை நெறிகள் தொடர்பாக பிரயோக கற்கைகளுக்காக புதிய பிரிவொன்றை நிறுவுதல் போன்ற செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட நிதியேற்பாடுகள் ஒதுக்குகள் மற்றும் உள்ளவாறான செலவினங்களை இணக்கம் செய்த போது நூற்றுக்கு 10 தொடக்கம் நூற்றுக்கு 161 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் நிலவின. இதற்கமைய, பாதீடானது பயனுள்ள முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகளிலும் கட்டுப்பாடுகளிலுமுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு

(ஈ) நூலகக் கட்டுப்பாடு

(உ) வாகனக் கட்டுப்பாடு

ஒப்பம் : டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

2015 .02.26

பதில் கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்,
இலக்கம் 306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்ல.

ஐயா,

**களனி பல்கலைக்கழகத்தின் இணை நிறுவனமான பாளி, பௌத்த பட்டபின்படிப்பு நிறுவனத்தின் 2013 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்று தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை**

மேற்போந்த விடயம் சம்பந்தமாக தங்களால் அனுப்பப்பட்ட 2015-02-10 ஆம் திகதியிடப்பட்டதும் EC/F/PIPBS/1/13/14 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான கடிதத்துக்கு அமைவாக உரிய பதில்களை இத்தால் சமர்ப்பிக்கின்றேன்.

2. **நிதிக் கூற்று**

2.2 **நிதிக் கூற்றுதொடர்பிலான கருத்துக்கள்**

2.2.1 **கணக்கீட்டு குறைப்பாடுகள்**

(அ) 2014 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது இருப்பு அளவை அறிக்கையின் பெறுமதியானது நிதி கூற்றில் சேர்ப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு , 2005 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்தும் நிலவிவரும் மாற்றங்கள் தொடர்பில் கண்டுபிடிக்கப்பட்ட காரணங்கள் களனி பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வாளருக்கு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் சீர்செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும்.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சீர்செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2.2.2 **இணங்கப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

இந்த கூற்றுகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள இருப்புகளில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு பின்வரும் விடயங்கள் காரணமாய் அமைந்துள்ளன.

இந்த நிறுவனத்தினால் அதன் வெளியீடுகளை வெளிப்படுத்தும் பணிகள் யாவும் 1996 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் கொழும்பு 05, கவர் வீதி, 09 ஆம் இலக்கக் கட்டடத்தில் நடாத்திச் செல்லப்பட்ட காலத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டன. அக்காலப்பகுதியில் வெளியீடுகளை களஞ்சியப்படுத்தி வைப்பதற்குப் புறம்பான இடவசதிகள் இருக்கவில்லை. ஆதலால், நிறுவனத்தின் நூலகத்தின் ஒரு பகுதியிலும் கட்டடத்தில் இடவசதி காணப்பட்ட இடங்களிலும் இந்த வெளியீடுகள் வைக்கப்பட்டிருந்தன. அதிக மழையுடனான காலங்களில் மழைநீர் நிறுவனக் கட்டடத்திற்குள் வடிந்து வந்தமையினால் வெளியீடுகள் சேதமடைந்தன.

அதேபோன்று நிறுவனத்திற்கு நிரந்தரக் கட்டடமொன்று இல்லாமையினாலும் களஞ்சிய வசதி இல்லாமையினாலும் வாடகை இடங்களுக்கு கொண்டு செல்கையிலும் இந்த வெளியீடுகள் சேதமடைந்தன.

இதற்கமைவாக, வரைவு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 304 கூறுகளுக்கான வித்தியாசம் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் மேற்கூறப்பட்ட பல்வேறுபட்ட காரணங்களின் மீது ஏற்பட்டனவாகும். இது தொடர்பில் இயைபுள்ள அதிகாரபீடங்களுக்கு சமர்ப்பித்து தீர்மானமொன்று எடுக்கப்படவுள்ளது.

## 2.3. வரவேண்டியவையும் செலுத்தப்பட வேண்டியவையுமான கணக்குகள்

(அ) கடன் நிலுவை 179,521/= ரூபா சார்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1. பல்வேறுபட்ட கடனாளிகள் - 855 - எதிர்காலத்தில் அரசபாகம் செலுத்தும்போது ஈடுசெய்வதற்கு.

2. கல்விசார் ஊழியர்களின் கூட்டுறவுச் சங்கம் - 4694 - 2015 ஆம் ஆண்டில் ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3. வாகனத் திருத்த வேலைகளுக்கான சேவைகள் - 173972, 179521 - 2014 ஆம் ஆண்டிலிருந்து எதிர்வரும் ஆண்டிக்ளில் ஈடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) ஏற்கனவே 2014 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 2.4 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணங்காமை.

(அ) இந்த பொருள் அளவீட்டு ஆய்வு அறிக்கையின் மூலம் கண்டறியப்பட்டுள்ள பொருட்களுக்கு உரிய பொருட்பதிவேடு இயைபுள்ள பிரிவுகளினால் இற்றைப்படுத்தாதன் காரணமாக இந்தக் குறைபாடு நிகழ்ந்துள்ளது. நிறுவனமானது தற்போது புதிய கட்டடமொன்றில் தாபிக்கப்பட்டுள்ளமையினால் இந்த பொருட்கள் மீண்டும் பிரிவுகளுக்கு இடையில் பகிர்ந்தளித்தலானது , 2017 ஆம் ஆண்டிற்கு இற்றைப்படுத்தப்பட்டு நிலவும் நிலையான சொத்துக்கள் பதிவேடு, இதற்கு ஒருங்கிணைவாகத் தயாரிக்கப்படும் பொருட்பதிவேடு என்பனவற்றுக்கு அமைவாக செய்யப்படும். 2014 ஆம் ஆண்டில் பொருள் அளவீட்டு ஆய்வு அறிக்கை மிக விரைவில் செய்யப்பட்டு விரிவான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பிரிவுகளுக்கு வெவ்வேறான பொருட்பதிவேடுகளைத் தயாரிப்பதன் மூலம் 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் அளவீட்டு ஆய்வு அறிக்கையில் இனங்காணப்பட்ட குறைபாடுகள், மேலதிகங்கள் தொடர்பிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆவண செய்யப்படும்.

(ஆ) 2013 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட அரசாங்க தொழில்முயற்சிகள் மீதான பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் கல்விசார் பதவியணியைச் சேர்ந்த ஆசிரியர்களின் வருகை மற்றும் விரிவுரை நடாத்துதல் சம்பந்தமான சகல அறிக்கைகளும் பிரத்தியேக நாட்குறிப்பேடுகளில் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ) 2014 ஆம் ஆண்டிற்கான பொருள் அளவீட்டு ஆய்வு முடிவடைந்ததன் பின்னர் இனங்காணப்பட்ட சேதமடைந்த சகல பொருட்களும் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) நிலையான சொத்துக்கள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு இறுதிக் கணக்குடன் ஒப்பிடப்பட்டு வருகின்றதோடு, 2015 ஆம் ஆண்டின் முதல் ஆறு (06) மாத காலப்பகுதிக்குள் சகல பணிகளும் பூர்த்தி செய்யப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.5 **<u>போதுமான அதிகாரத்துடன் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்</u>**

நிறுவகத்தின் மொத்த கணக்கு நடவடிக்கைகளுக்காக உள்ள ஒரே சிரேட்ட உதவி கட்டுப்பாட்டாளர் பதவி வெற்றிடமாக நிலவுகின்றமை அதன் கணக்கு பணிகளைத் தடையின்றி மேற்கொள்வதற்கும் இந்த பதவியில் வேறு அத்தியாவசிய விடுவிப்புகளின் போது கட்டாயமாக உருவாகக்கூடியதாகவிருந்த இடையூறுகளைத் தவிர்ப்பதற்காகவும் முகாமைத்துவ சபையினால் இந்த நியமனம் செய்யப்பட்டு, உயர் கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பதவிக்குரிய அத்தியாவசிய பணிகளைக் கையளித்தல் உட்பட ஏனைய சகல கடமைகளையும் நிறைவேற்றிக் கொள்ளும் அடிப்படையில் இந்த நியமனம் செய்யவேண்டியநிலை ஏற்பட்டதோடு, இந்தப் பதவிக்குரியதாக இறுதியாகப் பெற்ற பெறுகைகள் உட்பட உத்தியோகபூர்வ சலுகைகளின் மீது கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன.

4. தொழிற்பாட்டு மீளாய்வு

4.1 <u>கல்விசார் ஆற்றுகை</u>

மாணவர்களைப் பதிவு செய்தல்.

(அ) உரிய ஆண்டுகளில் பாடநெறி ஒவ்வொன்றுக்கும் நிலவும் மாணவர்களின் கோரிக்கைகளின் மீது, இது தீர்மானிக்கப்படும்.

(ஆ) கடந்த பல ஆண்டுகளை பரிசீலனை செய்யும் போது பௌத்த கற்கை கலைமானி பாடநெறிக்கு கூடிய கேள்வி நிலுவுகின்றமை தெரியவருகின்றது. இது நிறுவனத்தின் பொதுவான நிலைமையாகும். ஏனைய பாடநெறிகளை பிரபல்யப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(இ) பரீட்சைகளுக்குத் தோற்றுதலும் பரீட்சைப் பெறுபேறுகளும்

பாடநெறிகள் ஒவ்வொன்றுக்குமான மாணவர்களின் விகிதாசாரம் தீர்மானிக்கப்படுவது தேசிய மற்றும் சருவதேச மாணவர்களின் கோரிக்கை உட்பட குறித்த நிறுவனம் தாபிக்கப்பட்டுள்ள சூழலுக்கு ஏற்பவுமாகும்.

(ஈ) (i) 2013 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டிறுதியில் தவிர்க்கமுடியாத சில காரணங்களினால் பாடநெறிகளை சிலர் கைவிட்டுள்ளனர்.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் குறிப்பிட்ட தொகையினர் சித்தியடையாமல் இருப்பது சாதாரண நிலைமையாகும். ஒவ்வொரு மாணவரினதும் ஆற்றலின் மீது இது நிகழும்.

(ii) கலைமானி மற்றும் முதுமானி பாடநெறிகள் சார்பில் பதிவுசெய்யப்படும் மாணவர்கள் இரண்டு வருடகாலம் அல்லது மூன்று வருட காலம் அவர்களுடைய ஆராயச்சிப் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் இந்த காலப்பகுதி ஐந்து (05) வருடங்கள் வரை நீடிக்கும். ஆராய்ச்சி மாணவர்கள் அவர்களுடைய ஆராய்ச்சிகளை முடிப்பது முழுநேர மாணவர்களாக இருந்தல்லாமலும் பல்வேறுப்பட்ட கஸ்டங்களுக்கு மத்தியிலும் இந்த பணியில் ஈடுபடுகின்றமையினால் 2013 ஆம் ஆண்டில் 17 பேர்கள் அவர்களுடைய ஆராயச்சிகளை முடித்தமை உயர் பெறுபேறாக கூறமுடியும்.

## 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

(அ) இந்த விடயம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானமொன்றுக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டிலிருந்து இந்த புலமை பரிசில் வழங்கப்படுகின்றது.

(ஆ) கையளிக்கப்பட்ட 170 நூலக புத்தகங்கள் 1994 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டுவரையிலான (19 வருடங்கள்) காலப்பகுதிக்கு உரியவையாகும். நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தின் மீது இது தொடர்பில் தொடர்ந்தும் நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 4.3 பதவியணி நிருவாகம்

அவதானிப்புரைகள் உண்மையாகும்.

இந்த வெற்றிடங்கள் 2014 ஆம் ஆண்டில் நிரப்பப்பட்டுள்ளன. இதற்கமைவாக 2013 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி நிரப்பப்பட்டுள்ளது.

## 5. கணக்குப் பொறுப்பும் நல்லாட்சியும்

## 5.1 செயற்பாட்டுத் திட்டம்

எடுத்துக்காட்டப்பட்டிருந்த குறைபாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டில் இது உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

செயற்பாட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டட நிருமாணிப்புக்கான காணியை சட்டமுறையாக சுவீகரிப்பது தொடர்பில் பிரச்சினைகள் நிலவுகின்றமையினால் குறித்த காணியை சுவீகரிப்பதற்குரிய பணிகள் நிறுத்தப்பட்டன. இதற்கமைவாக, மேற்போந்த பணியும் அடங்கலாக நிறுவனத்திற்கு நிரந்தரக் கட்டடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் உரிய ஆண்டினுள் நடைமுறைப்படுத்தப்பட்டமை பற்றி மேலும் அறியத் தருகின்றேன். இந்த விடயம் முகாமைத்துவசபை கூட்டங்களிலும்கூட அறிக்கையிடப்பட்டுள்ளது.

5.2 வரவுசெலவுத்திட்டக் கட்டுப்பாடு

எதிர்காலத்தில் இதற்காக மேலதிக கவனம் செலுவத்துவதற்கு குறித்து வைத்துக் கொண்டேன்.

6. வகைமுறையும் கட்டுப்பாடும்

(அ) கணக்கீடு

(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு

(இ) நிலையான சொத்துக்கள் பதிவேடு

(ஈ) நூலக நிருவாகம்

(உ) வாகனக் கட்டுப்பாடு

2014 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தி எதிர்காலத்தில் குறைபாடுகள் குறையும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மேற்போந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக வழங்கப்பட்டுள்ள தெளிவுபடுத்தல்கள் பற்றி நான் தனிப்பட்ட வகையில் பொறுப்பு கூறுவதற்கு இத்தால் உறுதியுரைகின்றேன்.

இங்ஙனம்,

பேராசிரியர் கொட்டபிட்டியே ராகுல தேரர்,
பணிப்பாளர்.

பிரதிகள் :

01. துணைவேந்தர் - களனி பல்கலைக்கழகம்
02. தலைவர் - பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
03. செயலாளர் - நெடுஞ்சாலைகள், உயர் கல்வி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு
04. செயலாளர் - நிதி அமைச்சு